செய்தி வெளியீடு எண்–707 நாள் : 23.8.2010

**<u>இரஷ்யாவில் நடைபெறும் உலக சதுரங்கப் போட்டியில் பங்கு பெறும் திருச்சி மாநகர் மாற்றுத் திறனாளி செல்வி ஜென்னிதா ஆண்டோவுக்கு பயணச் செலவாக 2 இலட்சத்து 58 ஆயிரத்து 950 ரூபாய் !</u>**

**<u>முதலமைச்சர் கலைஞர் ஆணை!</u>**

திருச்சி மாநகரைச் சேர்ந்த மாற்றுத் திறனாளி செல்வி ஜென்னிதா ஆண்டோ – 19–9–2010 முதல் 4–10–2010 வரை ரஷ்ய நாட்டில் காண்டி மான்ஸியாஸ்க் என்ற இடத்தில் நடைபெறவிருக்கும் 39–வது உலக சதுரங்கப் போட்டியில் பங்கேற்கவிருக்கிறார். இப்போட்டியில் கலந்து கொள்வதற்காக செல்வி ஜென்னிதா ஆண்டோவிற்கு நிதியுதவி வழங்க வேண்டுமென தமிழ்நாடு மாநில சதுரங்கக் கழகம் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. மாற்றுத் திறனாளி செல்வி ஜென்னிதா ஆண்டோ அவர்களும், அவருக்குத் துணையாக ஒருவரும் போட்டி நடைபெறும் இரஷ்ய நாட்டிற்குச் சென்றுவர விமானப் பயணச் செலவு, காண்டி மான்ஸியாஸ்க் நகரில் 15 நாள் தங்கும் செலவு, விசா மற்றும் ஆயுள் காப்பீட்டுக் கட்டணம், ஒரு மாதகால உலகளவிலான பயிற்சிக்குரிய செலவினம் உட்பட மொத்தம் 2 இலட்சத்து 58 ஆயிரத்து 950 ரூபாய் செலவாகுமென தமிழ்நாட்டு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது. இத்தொகையில் வெளிநாடுகளுக்குச் சென்று, உலகளவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் ஒருவருக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அதிகபட்சமாக வழங்கும் 30 ஆயிரம் ரூபாயுடன் மேலும் தேவைப்படும் 2 இலட்சத்து 28 ஆயிரத்து 950 ரூபாயை அரசு நிதியிலிருந்து அளித்து மொத்தம் 2 இலட்சத்து 58 ஆயிரத்து 950 ரூபாய் மாற்றுத் திறனாளி செல்வி ஜென்னிதா ஆண்டோ அவர்களுக்கு பயணச் செலவாக வழங்கிட அனுமதி வழங்கி முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

* * *

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9